# இளகிய தோஷம்

"ஐயையோ, ஜெயிலுக்குப் போகிறாராமே அத்திம்பேர்! அடப் பாவமே! அக்கா? . . ." என்று படபடத்துக் கூவிக்கொண்டு வந்தான் சின்னா.

தபாற்காரர் வந்து போனார் என்னும் ஊகத்துடன் வாசலுக்கு விரைந்து வந்துகொண்டிருந்த கல்யாணி, தன் தம்பியின் கூப்பாடு கேட்டு, கண நேரம் மலைத்து நின்றாள்.

'என்னடா சின்னு? கொண்டா கடிதாசியை. அப்பாவுக்கா வந்திருக்கு?" என்று தம்பியின் கையினின்றும் பிடுங்கினாள் நீலத்தாளை.

'உனக்கு எழுதுவாரா? மானக்கேடு!" என்றான் சின்னா.

கல்யாணி கடிதத்தைப் படித்தாள். நான்கு வரிகளில் நாராசம் நிரம்பிக் கிடந்தது. "தான் ஜெயிலுக்குப் போகிறேன் என்னும் விஷயம் உங்களுக்கு உகந்ததாயிராது என்பதை அறிவேன் . . . ஆனால், நான் போகத்தான் வேண்டும். இரண்டே வருஷங்கள் தாம் . . . இது என் கடமையில் ஒரு முக்கிய அம்சம் . . . . " என்று எழுதியிருந்தான் ரங்கன்.

அழகிய வதனத்தில் பச்சை நரம்புகள் புடைத்துக்கொள்ள, வெளிறிச் சிறுத்த முகத்துடன் கல்யாணி, 'அம்மா' என்று பதறிப்போய், அன்னையை நாடித் திரும்பினாள். அதற்குமேல் சின்னுவுக்குத் தாங்கவில்லை. "நான் போய்ச் சொல்கிறேன் அம்மாவுக்கு!" என்று முந்திக் கொண்டு ஓடினான். "அம்மா, அத்திம்பேருக்கு ஜெயில் டாக்டர் வேலை!" என்று முழங்கினான்!

"அப்படியாடா?" என்று விழித்தாள் கல்யாணி!

பின்னே? உன்னைக் கல்யாணம் பண்ணிக்கொண்ட குற்றத்துக்கு நீ அவரைப் படுத்துகிறபாடு போதாதா? ஜெயிலில் வேறு அடைபடணுமா?' என்று கிண்டல் பண்ணிவிட்டு, ஒரு சிறு துண்டுச் சீட்டையும் நீட்டினான் சின்னா.

"நான் ஜெயில் டாக்டராக இரண்டு வருஷ காலம் வேலை பார்க்க வேண்டும். இதுதான் செய்தி. அக்காளைக் கொஞ்சம் தமாஷ் பண்ணு," என்று அருமை மைத்துனனுக்கு ஓதியிருந்தான் ரங்கன்.

வீட்டில் எல்லோரும் சிரித்துப் பேசி மகிழ்ந்தார்கள். கல்யாணி, "பாரேன், திருட்டுத்தனம்! அத்திம்பேர் குரு, மைத்துணன் சிஷ்யன் . . . . " என்று செல்லமாகக் கோபித்தாள் - கள்ளமாகக் கடிந்தாள்.

"என்ன வேலை போ, கண்றாவி! திருடர்களுக்கும் கொள்ளைக்காரர்களுக்கும் வைத்தியம் பண்ணுகிற வேலை!" என்று கல்யாணியின் தந்தை முதலில் சொன்னாரே தவிர, பிறகு அவரும், "மனிதத் தன்மையைக் காட்டுவதற்கு இதுவே சிறந்த வாய்ப்பு மாப்பிள்ளைக்கு," என்றார்.

ரங்கன் அழைத்துவிட்டான் மனைவியை. ஜெயில் வட்டத்திற்குள்ளேயே வீடும் வசதியுமாக இடங் கொடுத்துவிட்டார்கள். குடிபோக வேண்டியதுதானே! கல்யாணியையும் குழந்தையையும் அங்கே கொண்டுவிடச் சின்னா துணை புறப்பட்டான்.

மகளின் தலைக் குழந்தையாயிற்றே என்று நன்றாகச் செலவு செய்து, பொன் அரைஞாணும், சங்கிலியும், கைக்காப்பும் மோதிரமும் பண்ணிப்போட்டு, நல்ல நூக்குமரத் தொட்டிலும் வாங்கித் தந்து, தாயையும், சேயையும் அனுப்பத் தயாராகவே இருந்தனர் கல்யாணியின் பெற்றோர். ஆனால், இப்பொழுது அவள் போகிற இடத்தைப் பற்றியதொரு சங்கை, பெற்ற பாசத்துடனே வழக்காடியது.

"ஜாக்கிரதை, ஜாக்கிரதை; கள்ளக் கூட்டத்துக்கு நடுவே இருக்கப் போகிறாயே அம்மா; பத்திரம்," என்றனள் அன்னை.

"போலீஸும் பந்தோபஸ்துமாக இருக்கிற இடம் அது; பயமே இல்லையம்மா உனக்கு!" என்று தைரியமளித்தார் தந்தை.

"நான் மாமா கம்ஸனாக இல்லாமல் இப்படிச் சின்னானாகவே இருக்கவேண்டும், சுவாமி! ஜெயிலில் இருக்கப் போகிறார்களே. என் அக்காவும் அத்திம்பேரும்! இன்னும் இரண்டு வருஷத்திற்குப் பிறகு பிறக்கட்டும் குழந்தை, ஜெயிலுக்கு வெளியிலே!" என்றான் சின்னா ஹாஸ்யமாக.

"ஏண்டா, இரண்டாவது பிறக்க இங்கே தான் வருவாள்!" என்றாள் தாய்.

"ஆமாம், வருவேன், வருவேன்! நீ சும்மா இரு!" என்று சிணுங்கினாள், கல்யாணி, அசடு கொழிக்க.

** ** **

நான்கு நாட்களில் சின்னா திரும்பிவிட்டான். குழந்தையின் நகைகளை அப்படியே திரும்பக் கொணர்ந்துவிட்டான்.

"ஏண்டா?" என்றாள் தாயார்.

"பின்னே? அங்கே கல்யாணியின் வீட்டில் வேலைக்கு வருகிறவர்கள் அத்தனை பேரும் நல்ல திருடர்கள்!" என்றான் பையன், நிதானமாக.

"அப்படின்னா?"

"அங்கேயே ஜெயில் வாசம் பண்ணுகிறார்களே - குற்றவாளிகள் - அவர்கள் தான் வீட்டு வேலை செய்ய வருகிறார்கள்?"

"ஆண்பிள்ளைகளா?"

"ஆண் பெண் எல்லாரும்தான். தோட்ட வேலைக்கு, ஜலம் ரொப்புகிறவன், பத்துப் பாத்திரம் தேய்க்கிறதற்கு, யாராரோ மாற்றி மாற்றி வருகிறான்கள்."

"பொம்மனாட்டி எதற்கு வருகிறாள்? வீடு கூட்டவா?"

"வீடு பெருக்க உள்ளேவிடவே பயப்படுகிறாளே கல்யாணி! முந்தாநாள் மாவு இடித்துத் தரவும் அரிசி புடைக்கவும் ஒருத்தி வந்தாள்.... இந்தத் தேன்குழல் அந்தத் திருடி இடித்துக் கொடுத்த மாவுதான்!" என்று பட்சண சம்புடத்தைத் திறந்து வைத்தான் சின்னா.

"நான் தொடமாட்டேன், அதை," என்று நொடிப்பொழுது கைகளை உதறிவிட்டாள் தாய். சுளுக்கு விடுபட்ட மாதிரி ஒரு உணர்வு. "பாவம், குழந்தை பண்ணி அனுப்பியிருக்கிறாளே! போனதும் போகாததுமாக இந்த வேலையை எதற்கு இழுத்துப் போட்டுக்கொண்டாள் என்கிறேன். நான் பண்ணித் தந்த சீடை முறுக்கு இன்னும் நாலுநாள் தாங்குமே! எனக்கு இவள் செய்து அனுப்பாவிட்டால் என்ன? ஆசை, பாவம். இங்கே காரியம் செய்யாமல் சுற்றினாலும், தனக்குக் காரியம் செய்ய வரும் என்பதை எனக்குக் காட்ட வேண்டுமாம், வேறென்ன?" என்று பெருமிதப்பட்டுக்கொண்டே, பட்சணத்தைக் கணவரிடம் தந்து, தானும் வாயில் போட்டுக் கொண்டாள்.

"கொஞ்சம் கெட்டியாயிருக்கு!" என்றார் அவர்.

"ஆமாமாம்! சொல்லமாட்டீர்களோ? கைக்குழந்தையையும் வைத்துக் கொண்டு, திருட்டுக் கைகளை வேலைக்கு வைத்துக்கொண்டு, அங்கொரு கண்ணும் இங்கொரு கண்ணும்.... அங்கொரு காலும் இங்கொரு காலுமாய்த் திண்டாடுகிறாள், குழந்தை. எனக்கானால் அந்த மாதிரி இடத்தில் கைகால் ஓடவே ஓடாது . . . "

"கல்யாணிக்கும் முதல் நாள் முழுதும் அழமாட்டாக் குறைதானம்மா; அத்திம்பேர்தான் ஒரு அதட்டுப் போட்டார்; அப்புறம் சும்மா இருந்தாள்,"

"என்னடா அதட்டினார்?"

"சின்னாகூடவே போயிடு, ரெண்டு வருஷம் கழிச்சு வரலாம்; அப்படீன்னார்?"

"ஊம்?"

"வேலைக்கு வருகிறவன்களைக் காவல் காத்துக்கொண்டு, போலீஸும் வெளியிலேயே நிற்கிறானம்மா; பயமில்லை. ஆனா, மனசு சட்னு கேட்கிறதா? அதான், வேறொன்றும் இல்லை; கொஞ்ச நாளில் பழகிவிடும்."

"என்னவோ போ," என்று பெருமூச்செறிந்தாள் தாய், பட்சண சம்புடத்தைத் தழுவியபடி.

"உனக்கு எப்படி இருந்தது அந்த இடம்? ஜெயிலை எல்லாம் நன்றாகச் சுற்றிப் பார்த்தாயா? ஆஸ்பத்திரி எப்படி இருக்கு?" என்று கேட்டார் தந்தை, தம் பங்குக்கு.

"எல்லாம் பார்த்தேன் அப்பா. என்னவோ ஜெயில் என்றால் மனசுக்குத்தான் ஒரு மாதிரியாய்த் தோன்றுகிறது . . . "

"பயப்படும்படியா இருக்காடா சின்னா?" என்று குறுக்கிட்டாள் தாயார், ஆதங்கமுடன்.

"பயமென்ன அம்மா? பொறுப்பில்லாமல் ஏற்பாடு செய்வார்களா? கைதிகளை வேலைக்குவிடுவார்களா? தம்படி சம்பளம் கொடுக்க வேண்டாம்; அந்தந்த வேலைக்கு அவனவன் வந்து போகிறான். ரொம்ப சௌகரியமாய்த்தானிருக்கிறது . . . "

"அதானே! போன மாதம் இங்கே அடுத்த தெருவிலே கொள்ளை போகவில்லையா? இரண்டாயிரம் பெறுமான சாமான் போச்சே! யோக்கியனாட்டம் வந்தானாம் திருடன். யார் என்ன செய்ய முடிந்தது? அதெல்லாம் விதி!" என்றார் கல்யாணியின் தந்தை.

இந்தப் பேச்சுக்குப் பின் அன்னை மனம் சற்றே தெளிவு பெற்றுவிட்டது. ஆனால், அங்கே பெண் கல்யாணி சங்கடப்பட்டுக்கொண்டுதானிருந்தாள். இங்கு உருகியவள் தாய்-நெய்போல என்றால் அங்கு வெண்ணெய் நிலையில் இருந்தாள் அவள்.

குற்றவாளிகள் என்றும் திருடர்கள் என்றும் நினைக்காமல், கைதிகள் என்று மட்டுமே நினைத்து, அவர்கள் செய்து கொடுத்த வேலைகளை சர்வசாதாரணமாக ஏற்கத்தான் பெருமுயற்சி செய்து வந்தாள் கல்யாணி. ஆனால், உணர்ச்சிக்கு விலங்கிடுவது எளிதாகவில்லை. தகிடுதத்தம் செய்தது உள்ளம். பொழுது விடிந்தால், பொழுது சாய்ந்தால் "வேலைக்கு வரப்போகிறானே" என்று திகில். "சரி, செய்தவரைக்கும் போதும்; இதைத்தானே செய்துகொண்டால் போயிற்று," என்று வேலைகளைச் சரியாக வாங்கி கொள்ளவும் தயக்கம். "சீக்கிரம் போய் சேரட்டும்," என்று தோன்றிவிடும் - அப்படியொரு அச்சம். அவர்களுக்குச் சம்பளம் கொடுக்க வேண்டாம் - வேண்டிய மட்டும் வேலைகளைச் செய்து கொடுக்கக் கடமைப்பட்டவர்களாம்... இந்த அம்சம் மகிழ்ச்சிக்குரியதாகவே இல்லை. குற்றம் செய்கிற மாதிரி கல்யாணியின் நெஞ்சு துடிக்கத்தான் செய்தது இதனாலே! கையால் சம்பளம் கொடுத்து வேலையைச் செய்வித்துக் கொண்டால்தான் அமைதியோ உரிமையோ கிட்டும் என்று தெரிந்தது.... இந்த வேதனைக்கு மாற்று என்ன?

வேலைகளையும் உதவிகளையும் ஏற்றுக்கொண்டு, அந்த ஆட்களுடன் பேச்சு வார்த்தை அதிகம் வைத்துக்கொள்ளாமல், அவள் ஒதுங்கி ஒதுங்கி இருந்தாள். அப்படியிருப்பது அவளுடைய இயல்புக்கு ஒத்ததாக இல்லை. முதன்முதலாக, முந்தின ஆண்டு அவள் வேற்றூரில் குடித்தனம் செய்தபோது, அங்கு ஒரு சிறு பெண் இருந்தாள் பணிப் பெண்ணாக. அந்தச் சிறுமியை இவள் நடத்திய கண்ணியங்கண்டு, அக்கம்பக்கத்தவர் வியந்தனர்; மகிழ்ந்தனர். "வேலைக்காரி மாதிரியா பார்க்கிறாள்? சிரித்துப் பேசிக்கொண்டு தங்கை மாதிரி அன்பு செலுத்துகிறாள்!" என்று சொன்னார்கள். அதற்குத் திருஷ்டியா இந்த நிலைமை? இளகிய மெழுகிற்கு இது குத்து முத்திரையா? மென்சொல் பேசி, கனிவாக ஏழைக்கு இரங்கி, வேலைகளைச் செய்து கொடுக்கும் உபகாரிக்கு இதமாக இருக்கும் பாக்கியம் இல்லை இங்கே.

சிரமப்பட்டுக்கொண்டிருந்த கல்யாணிக்கு ஒரு வழி தெரிந்தது. அன்பு வழிதான். ஒரு நாள் சாதமும் குழம்பும் அதிகமாக மீந்து போயிருந்தன. அவ்வப்போது கொஞ்சம் நஞ்சம் மீந்து கிடக்கும் தேய்க்க வேண்டிய பாத்திரங்களைப் போட்டுவிட்டு அப்பால்போய் விடுவது அவள் வழக்கம். முரட்டு ஆண் பிள்ளை ஒருவன் புரட்டுப் புரட்டென்று புரட்டிப் பாத்திரங்களைத் தேய்த்து வைக்கும் கண்ணராவியைப்' பார்க்கப் பிடிக்காமல், இந்தப் புறமே வரமாட்டாள் அந்தச் சமயங்களில். இன்று குழம்பும் சோறும் நிறைய மிகுந்து கிடந்ததனால் மனசு கேட்காமல்,

உள்ளேயிருந்து ஒரு இலையைத் தேடி எடுத்து வர எண்ணினாள், 'சாப்பிடுவியா?' என்று கேட்க நினைப்பு, வந்து பார்த்தாள் கல்யாணி. கசங்கிய காகிதம் ஒன்றைப் பிரித்துப் போட்டுக்கொண்டு, அவன் அந்த அன்னத்தை அதில் வைத்து ஆவலுடன் உண்பதைப் பார்த்தாள். அந்தக் கைதியின் முகத்தை அந்தக் கணம் பார்த்த கல்யாணியின் கண்கள் கலங்கின.

கணவனிடம் சொன்னபொழுது அவன், "ஏதோ களியும் கூழும்தானே அங்கு தருகிறார்கள்?" என்று பதிலளித்தான்.

இந்த வேலையாட்களுக்குச் சம்பளம் கொடுக்க வேண்டாம்; சரி. ஆனால், வயிற்றுக்குத் தீனி கொடுத்தால் என்ன? கல்யாணிக்குத் தெம்பு வந்தது. ஊட்டங் கொண்டது உள்ளம். மனசு நிறைந்தது. வயிற்றுக்கு அளிக்கும் உணவில்தான் இருக்கின்றன, உயிரும், சக்தியும்; தானமும், தருமமும், உறவும் அன்பும். கல்யாணி விரும்பிய திருப்தியும் அமைதியும், முகம் மறந்திருந்த பழகிய குழந்தைபோல, மெல்ல மெல்ல நெருங்கி வந்து சேர்ந்தன.

**　　**　　**

"அம்மா," என்று கையைப் பிசைந்தபடி எதிரில் நின்றிருந்தாள், அந்தப் பெண் கைதி.

"என்ன?" என்றாள் கல்யாணி.

"நீ ஊரிலிருந்து வந்த புதுசுலே மாவு இடித்துக் கொடுத்தேனே - அப்போ அதுக்கு இரண்டணாப் பணம் கொடுத்தியே, தாயி!"

"ஆமாம், கொடுத்தேன்."

"அப்புறம் இரண்டு தடவை வேலை செய்து கொடுத்தேனே - நீ ஒண்ணும் தரல்லியே அம்மா...... இன்னைக்கி ஏதானும் .. . " என்று சிரிப்பும் கெஞ்சலுமாய் இறைஞ்சினாள் அவள்.

"வேணுமா?" கல்யாணி கூர்ந்து பார்த்தாள்

"உன் புண்ணியம் தாயி."

"சரி, இரு," என்று உள்ளே போய் சில்லறையைக் கொண்டு வந்து கொடுத்துவிட்டாள் கல்யாணி. "பணங்காசு தர வேண்டாம்; தரப்படாது," என்று ரங்கன் அவளிடம் சொல்லி வைத்திருந்தான். அதனால்தான் முன் இரண்டு தடவைகளிலும் அவள் கூலிக் காசு தரவில்லை. காசு கொடாமல் வேலை வாங்கச் கூசித்தான் இரண்டொரு சமயங்களில் மட்டும் அவளை வரவழைத்து வேலை சொன்னாள். இப்பொழுது கல்யாணிக்கு சற்று ஆறுதலாகவே இருந்தது. ஓரணா, இரண்டணா கொடுத்து மன அமைதியையும் வாங்கக் கூடியதாயிருக்கிறதே! வேலை செய்பவளும் வணங்கி வாழ்த்துகிறாளே! இந்தச் சில்லறை விஷயத்தைக் கல்யாணி கணவனிடம் சொல்லப் போகவில்லை. ஏழை பாழைகளுக்குக் கருணை காட்டுவது வீட்டுப் பெண்களுக்குரிய சலுகைதான் என்று நினைப்பு. ரங்கன் அறிய வேண்டிய அவசியம்?

கல்யாணி தயாரித்து வழங்கிய பட்சண வகைகளைக் கண்டு ரங்கன் ஆச்சரியத்தில் மூழ்கினான். கல்யாணி உற்சாகத்துடன் பலவிதப் பணியாரங்கள் செய்தாள். பள்ளியில் கற்றவை, தாயிடம் பயிற்சி பெற்று அறிந்தவை, பாக சாஸ்திரப் புத்தகத்தினால் தெரிந்து கொண்டவை..... இப்படிப் பலவிதம். "ஏதேது, முறுக்குச் சுற்ற வந்துவிட்ட குஷியா?" என்பான் ரங்கன். "ஏன், மற்ற தினுசுகள் என்னவாம்?" என்பாள் கல்யாணி. "வேலைக்காரியை அடிக்கடிக் கூப்பிட்டாகிறது! பயம் தெளிந்துவிட்டதாக்கும், ஜமாய்!" என்றான் அவன். 'எல்லாம் பழக்கம்' என்றாள் இவள். 'கூலிக்காசு தருகிறேன்' என்று சொல்ல நினைப்பாள். உடனே மறப்பாள். மறக்க விருப்பம்தான் காரணம்.

ஓர் நாள் அகப்பட்டுக்கொண்டாள்.

"ஏன் குறைகிறது? ஆறு ரூபாய் பன்னிரண்டணா கணக்காய் வைத்திருந்தேனே? இப்போ அந்தப் பேப்பர்காரனுக்குக் கட்டவேண்டுமே, வந்து நிற்கிறானே!" என்று ரங்கன் கேட்டான்.

"நான்தான் எடுத்தேன் - வேறே சில்லறை எனக்குத் தட்டுப்படவில்லை," என்றாள் கல்யாணி.

"பேப்பருக்கும் பத்திரிக்கைக்கும் தனிப் பைலில் போட்டு வைக்கிறேனே, எதற்கு? அதை எடுக்கலாமா?"

"பெரிய குற்றம்போல வருகிறதே கேள்வி! ஒரு மூன்றணாவுக்கு நானும் தான் தேடினேன், தேடினேன்; அப்புறம் இதில் எடுத்துக்கொண்டேன்!"

"அப்படி என்ன அவசியம் வந்துவிட்டது?"

"வந்தது அவசியம்.... ஏதோ அவகாசம் . . . "

"உடைப்பிலே போடு அதை! நான் ஒரு ஒழுங்காய் இதற்குக் கட்ட வேண்டியதை எண்ணி ஒதுக்கி மெனக்கெடக் கணக்காய் வைத்திருக்கிறேனே - முட்டாளா நான்?"

இத்தனை கடுமையாய்ப் பேசமாட்டான் ரங்கன். இன்றைக்கு என்னவோ தீப்பொறி.

"நான் முட்டாளா?" என்று துக்கம் பொங்கி வந்தது கல்யாணிக்கு. "ஒரு மோழிவடாம் பண்ணி, உங்கள் தங்கைக்கு அனுப்பலாம் என்ற மாவு இடிக்கச் சொன்னேனே இன்றைக்கு? இடித்தவளுக்கு மூன்றணாக் கூலியைத் தந்தேன். அவளுடைய வயிற்றெரிச்சலைக் கொட்டிக்கொள்ள வேண்டுமா நான்? வெறுமனே வேலை வாங்க எனக்குப் பிடிக்கிறதில்லை!' என்றாள் அழுகையும் ஆத்திரமுமாக.

"அடத் தாராளமே! அப்படியா சேதி!' என்று நையாண்டியாக உரக்கவே சொல்லிவிட்டு ரங்கன், பிறகு முணுமுணுப்பாக என்னமோ பொருமினான். வாசலுக்கு விரைந்து, "இதோ ஏழு ரூபாய். நாலணாவை அடுத்த மாதத்தில் சேருங்கள்.... கணக்காய் மெனக்கெட எடுத்துத்தான் வைத்திருந்தேன்..." என்று சொல்லிவிட்டு உள்ளே வந்தான்.

கல்யாணி விசும்பிக்கொண்டிருந்தாள். 'ஏன், என்ன?' என ரங்கன் பார்க்கவுமில்லை, கேட்கவுமில்லை. அன்றையப்பொழுது இந்த வேற்றுமை நிலையிலேயே கழிந்தது தம்பதிக்கு. கண்கலக்கமும், சிவந்த மூக்கும் ஒளிவிடும் வைர பேசரியுமாகக் கல்யாணி ஒரே ஒரு தடவை மட்டும், "நீங்கள் சொன்ன வார்த்தை மறக்காது, இந்த ஜன்மத்துக்கு. முணுமுணுப்பானேன்? அடித்துச் சொல்வதுதானே.... சொன்ன வார்த்தை சொற்பமா?" என்றாள்.

"ஆமாம், சொன்னேன்; அப்படித்தான் சொல்லுவேன், போயேன்," என்றான் ரங்கன்.

"போறேன்." இத்துடன் பேச்சு நின்றது. நீடித்துவிட்டது மோனம்.

'சின்னாவை அனுப்புங்கள். கல்யாணியை அழைத்துப் போகட்டும். நாங்கள் இங்கு சந்தோஷமின்றி இருக்கிறோம்,' என்று மாமனாருக்குத் தந்தி கொடுத்துவிட்டான் ரங்கன்.

** ** **

"சின்னாவுக்கு என்ன தெரியும்? சிறுபிள்ளை. கணவன் மனைவியின் பிணக்கு என்னவோ? நான் போகிறேன்," என்றாள் தாய்.

"நான்தான் போய்ப் பார்த்துவிட்டு வருகிறேன்," என்றார் தந்தை.

"சரி, அப்படிதானிருக்கட்டும். நான் வந்தால், எதையாவது என்னிடம் புகாரிடுவாள்-எனக்கும் தர்மசங்கடம்தான்," என்று இணங்கினாள் தாய்.

அப்பாவைக் கண்டதும், ஆச்சரியமோ கலக்கமோ இல்லாமல் மகிழ்ந்து வரவேற்றாள் கல்யாணி.

"சின்னாவை எதிர்பார்க்கவில்லையாம்மா?" என்று கேட்டார் தந்தை.

"அம்மாவாவது நீங்களாவது வருவீர்கள் என்றுதான் எனக்கு எண்ணம்," என்றனள் கல்யாணி.

"மாப்பிள்ளை தந்தி கொடுத்தாரே- உனக்குத் தெரிந்தா கொடுத்தார்? ஏன் மாப்பிள்ளை?'

"அப்புறம் மெள்ளச் சொன்னார் ஆசாமி!"

"அப்படியென்ன சண்டை, ஊம்?" என்று கண்சிமிட்டிச் சிரித்தவாறே கேட்டுவிட்டார் தந்தை.

"சண்டை என்ன, மண்டை? இவர் ஆனாலும் மோசம் அப்பா; கண்டபடி சொன்னால்?"

"என்ன சொன்னேன்?"

"சொன்னீர்கள் - சுரைக்காய்க்கு உப்பில்லை என்று! ஐய!"

"சரி, சரி, இப்போ சண்டை வேண்டாம். எனக்குத் தெரியாவிட்டால் போகிறது சமாசாரம்; ஏதோ உப்புப் பொறாத விஷயம்தானே?"

"உப்பு ரொம்ப மீறியிருக்கிற விஷயம் தான்! அந்த ஒரு வார்த்தைக்கு எத்தனை ரோசம்? அப்படியா பொத்துக்கொண்டு வரும் ஒருத்திக்கு! அடேயப்பா!"

"சரி, சரி, அதென்ன வார்த்தையோ, எனக்குத் தெரியவே வேண்டாம். உங்கள் ரகசியமாகவே இருக்கட்டும், மாப்பிள்ளை."

"ஒன்றுமில்லை அப்பா; மாவு இடித்துக் கொடுத்தவளுக்கு மூன்றணா இவருடைய ஸ்பெஷல் பர்ஸிலிருந்து எடுத்துத் தந்தேன். இது ஒரு பிரமாதமா? இதற்கு அத்தனை பெரிய வார்த்தை சொல்ல வேண்டாம்!"

"பெரிய வார்த்தை போ! என்னவோ சொல்லிவிட்டேன், சொல்லக்கூடாத வார்த்தை! இவள் என்ன தனக்காக எடுத்துக்கொண்டு பொரிகடலை வாங்கித் தின்றுவிட்டாளா? இன்னொருத்திக்குத் தானே கொடுத்தாளாம்! 'திருட்டுத்தனமாகக் கூலி தருகிறாயா?' என்று கேட்கிறதற்கு, 'திருட்டுத்தனம்' என்று சொல்லிவிட்டேனாம் - குடி முழுகிவிட்டாற்போல் அழுகை."

"அப்பாடி," என்று நீண்டதொரு பெருமூச்சுவிட்டார் பெரியவர். பிறகு முறுவல் செய்தார்.

"எங்கே கல்யாணி? ஏம்மா நீ கூடத்தானே மாப்பிள்ளையைப் பற்றி இதே வார்த்தை சொன்னே! அத்திம்பேர் குரு, சின்னா சிஷ்யன்னு சொன்னியே!" என்றார் அழுத்தமாக.

"அதென்ன சேதி? அடி கள்ளி!" என்று சொல்லிவிட்டு ரங்கன், "ஐயோடா, ஆபத்து!" என்று வாய் புதைத்தான். பயந்தவன் போன்று.

கல்யாணி சிரிக்கவில்லை. சிரிக்கத் தோன்றவில்லை அவளுக்கு. "அதென்னவோ அப்பா, எனக்கொன்றும் நினைவில்லை அதெல்லாம். இவர் சொன்னபோது, எனக்குத் துக்கம் துக்கமாய்த்தான் வந்தது. இங்கே வேலைக்கு வருகிறார்களே, அவர்களுக்குப் பணங்காசு தர வேண்டாம் என்று சொல்லியிருந்தார். நான் அந்த மாவு இடிக்கிற பொம்மனாட்டிக்கு இரண்டணா, மூன்றணா தருவேன். இவரிடம் சொல்லாமல் எதுவுமே செலவு பண்ணமாட்டேன்; இதை மட்டும் சொல்லவில்லை, வாஸ்தவம். சகவாசதோஷம், எனக்கும் திருட்டுப்புத்தி வந்துவிட்டதா என்று எனக்கே பயமாய்ப் போயிற்று, இவர் திட்டினதும்.... ஏற்கெனவே என் மனதில் உறுத்தல்...."

"ஊம், அப்புறம்?" என்று ரங்கன் சிரித்தான். கல்யாணி பேச முடியாமல் தொண்டையடைத்துப் போய் மென்று விழுங்கிக்கொண்டிருந்தாள்.

"சரிதான், கிடக்கிறது போ. உன் அம்மா பண்ணியிருக்கிற அக்கிரமங்களை நான் சொல்லப்போனால், கொள்ளைக்காரி என்று இந்த ஜெயிலிலேயே தள்ளணும்! உனக்குச் சீர்ப்பாத்திரம் வாங்கிச் சேர்த்த விதரணை தெரியுமா, சொல்லட்டுமா?" என்று கேட்டார் பெரியவர்.

"வேண்டாம் மாமா, குற்றம் பண்ணின மாதிரி என் மனசு அடித்துக்கொள்ளும் மாப்பிள்ளையாக இருக்கிற தோஷம்!" என்று இளிக்காத குறையாகச் சிரித்தான் ரங்கன் - கல்யாணியைக் கடைக்கண் பார்த்து.

*************

(சுதேசமித்திரன், ஆகஸ்ட் 8, 1957)